(සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

# Km/Km/Al-Mazhar Girls' High School - Nintavur

## பாடசாலை மட்ட இரண்டாம் தவணைக்கணிப்பீடு - 2024

## தமிழ் இலக்கிய நயம்

புள்ளிகள்

சுட்டெண்.................. தரம் : 11 நேரம் : 3.00 மணித்தியாலம்

### பகுதி 1

**பகுதி 1 ல் முதல் இரு வினாக்களுக்கும் சுருக்க விடை தருக? இவ்வினாத்தாளிலே விடையளிக்குக?**

**(1) தொடக்கம் (5) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக?**

1)

I. "அய்யோடா.... கீழே சிதறிய முத்துக்களைப் பொறுக்குங்கள் என் மகள் வாய்திறந்து பேசிவிட்டாள்...."

அ). இக்கூற்று யாரால் கூறப் பெற்றது?

..........................................................................................................................

ஆ). முத்துக்கள் எதற்கு குறியீடாக சுட்டப்படுகின்றது?

..........................................................................................................................

..........................................................................................................................

II. ".....குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு

கோதையர் போரிட முன்வருவோம்"

அ) குன்று நிகர்த்த மனவுறுதி" என்னும் தொடர் குறிப்பது?

..........................................................................................................................

..........................................................................................................................

ஆ) கோதையர் போரிட காரணம் யாது?

..........................................................................................................................

..........................................................................................................................

III. " போதுமான ஆட்கள் ஏறியும்

புறப்படவில்லை புகையிரதம்

லயன்கள் "

அ) லயன்கள் என சுட்டப்பெறுவது எது?

..........................................................................................................................

..........................................................................................................................

ஆ) அக்கவிதையில் பொதிந்துள்ள செய்தி யாது?

..........................................................................................................................

..........................................................................................................................

IV. " பாலைப்பண், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனதையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும்"

அ) இக்கூற்று இடம்பெறும் ஆற்றுப்படை நூல் எது?

..........................................................................................................................

..........................................................................................................................

ஆ) அந்நூலினை யாத்த ஆசிரியர் யார்?

..........................................................................................................................

..........................................................................................................................

V. நன்றி கொன்று அரு நட்போடு நார் அறுத்து.........."

அ) அரு நட்போடு நார் அறுத்து என்ற தொடர் குறிக்கும் பொருள் யாது?

........................................................................................................................................................

........................................................................................................................................................

ஆ) உதவியை மறந்துவிட்டு குற்றங்களைச் செய்தவனாக காட்டப்படுவது யார்?

........................................................................................................................................................

........................................................................................................................................................

(5 x 4 = 20 புள்ளிகள்)

**2) கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட்பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக?**

ஹைக்கூ பாதியாய் திறந்த கதவு; அதன்வழி எம்மை அழைக்கும் கைச்சைகை (ஆர்.எம்.பிளித், ஹைக்கூ 'கவிதை உலகின் புதிய மழலை" என்று (மேலாண்மை பொண்ணுசாமி) குறிப்பிடுவது பொருத்தமானதாகும் ஜப்பானிய கவிதை மரபு தன்கா, சோக்கா, ரெங்கா, டாங்கா, சென்றியு, ஹைபுன், ஹொக்கு எனப்பலவகை பா வடிவங்களைத் தன்னுள் பொதித்து வைத்துள்ளது. அதன் இன்னொரு வடிவமே ஹைக்கூ ஆகும்.

ஹைக்கூ என்பதன் அர்த்தம் என்ன? என்ற கேள்விக்கு சேம்பர்ஸ் அகராதி 5,7,5 அசைகள் (syllabls) கொண்ட ஜப்பானிய கவிதை" என்று பதிலுரைக்கின்றது. எனினும் இந்த விளக்கத்தையும் தாண்டி ஹைக்கூ ஒரு அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசணையூட்டும் அழகு, சிந்தனையெழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம். ஒரு மின்னல் அல்லது மின்மினி எனலாம்.

கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது கிளர்த்தும் சிந்தனைகளும், சம்பாசணைகளும், எதிர்வினைகளும். கேள்விகளும் அதிகம் வாசக மனசுக்குள் அலை எழுப்பும். அதனால்தான் ஹைக்கூ காந்தம் போல் இழுக்கும் மொழிநடையையும் பிரபஞ்சத்தின் அந்தரங்கங்களையும் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வையையும் கொண்டுள்ளது எனலாம்.

01. ஹைக்கூ பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை தருக?

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

(4 புள்ளிகள்)

02. ஹைகூவின் பொதுவான பண்புகளாக கட்டுரையாசிரியர் முன்வைத்துள்ள விடயங்களைத் தருக?

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

(6 புள்ளிகள்)

03. ஜப்பானிய கவிதை மரபுகளைத் தருக?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(4 புள்ளிகள்)

04. ஹைக்கூ தரும் அனுபவ உணர்வுகளை குறிப்பிட்டு விளக்குக?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(6 புள்ளிகள்)

**அல்லது**

அயலும் புடையும் வாழவேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்
அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி
வேந்தர் மணிமுடியும் கண்டீரோ தம்பி

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ

பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ

குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ

ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க.

1. வாய் மொழிப்பாடல் என்றால் என்ன? அவை வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(4 புள்ளிகள்)

2. மருத்துவிச்சிப்பாடல் என்றால் என்ன? மருத்துவிச்சிக்கு வழங்கப்படும் சன்மானப் பொருட்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(6 புள்ளிகள்)

3. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகின்றாள்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(4 புள்ளிகள்)

4. இப்பாடலில் கிராமிய மண்வாசனை புலப்படும் விதத்தினை உதாரணங்களுடன் எடுத்துரைக்குக?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(6 புள்ளிகள்)

தமிழ் மொழியும் இலக்கியமும் (?)
தரம் – 11
<u>விடைகள்</u>

(121)

பகுதி – 1

01)
i. அ – மாநாய்கனால்
ஆ – கண்ணகியின் பேச்சு.

ii. அ) மலை போன்ற திடமான மன உறுதி
ஆ) சுதந்திர வருதலையை வேண்டி

iii. அ) – தோட்டத் தொழிலாளர்களின் தொடர் குடியிருப்பு.
ஆ) தேயிலைத் தோட்டத்தில் லயன் – களின் நெரிசலுக்குள் வசிக்கும் மக்களின் வாழ்க்கை முறையானது கவலைக் வெளிப்படுத்துகின்றது. அவர்களின் அவலம் நிறைந்த வாழ்வு நகராத வெய்ய – காலம் வாழ்கின்றது தொடர்கின்றமை

iv. அ) பொருநராற்றுப் படை
ஆ) முடத்தாமக் கண்ணியார்.

v. அ) பெறுவதற்கு அரிய நட்புக் கரத்தை அளித்த வடல்
ஆ) சுக்ரீவன்.

02)
1. ஆர். எம். பார்த் – வாசகர் பாதியாய் திறந்த கதவு; அதன் வழி எப்பை அழைக்கும் வாசகனை
* மேலாண்மை பொன்னுசாமி – வாச கனைத உலகின் புதிய மழை

2. • வாசகர் ஒரு அனுபவப் பகிர்வு
• வியப்பால் ஆழ்த்தும் வீச்சு
• இரசனையூட்டும் அழகு
• சிந்தனை யெழுப்பும் அலை,
• உணர்ச்சியை ஏற்றும் தூண்டு

3. தன்கா, சோக்கா, செங்கா, டாங்கா, சென்றியு, ஹைபுன், வொக்கு.

4) கணப் பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது கிளர்த்தும் சிந்தனைகள், கற்பனைகள் எதிர்வினைகளும், கேள்விகளும் அதிகமாக வாசகர் மனதில் அலை எழுப்புவதும் அதிகம்.

03)

1. நாட்டுப் புற மக்களால் சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப தங்களின் உணர்ச்சிகளுக்கேற்ப பாடப்படும் பாடல் வாய் மொழிப்பாடலாகும்.

- நாட்டார் பாடல்
  கிராமியப் பாடல்கள்
  ஏட்டறியாப் பாடல்கள்
  எழுத்தறியாப் பாடல்கள்.

) மாதவ சிவஞான யோகி சொல்கின்ற கருத்து வழி மொழியை பாடலாக்கும் போது அதனை கையால் எழுதப் படாமல் வாய் மொழிப் பாடலாகும்.

எண்மங்கலங்கள் – அரிசி, நெல், பாக்கு, மஞ்சள்

- அழகும் புகழும் வாழ்வும் அன்னமும் சுற்றமும் வாழ ----
- அரிசி, நெல், மஞ்சள், பாக்கு, உள்ளி, அரிசி, உப்பு, காசு போன்ற செல்வங்கள் பெற்று ஆராவாய் வாழ வாழ்த்துதல்
- கொம்பியும் கொப்பரும், வெத்தியும் பேரனும், பூட்டியும், பூட்டனும், கொம்மான் மாமி, குஞ்சியாச்சி, குஞ்சியப்பு, பெரியாச்சி, பெரியப்பும் வாழும் படியாக நீண்ட ஆயுளுடன் குழந்தை வாழ வேண்டும்
- உறவும், தேசமும் வாழ ஆசிரியர்களுக்கும், இறைவனுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்து வாழ வாழ்த்துகிறார்.

4)
- கிராமத்து உறவுமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
- கிராமங்களில் உள்ளயும் வளமானதும், மங்களகரமானதுமான பொருட்களை கூறி வாழ்த்துதல்.
- கிராமிய கூட்டுக்குடும்ப முறையமைப்பை வெளிப்படுத்துதல், குறைவாக சமுக உறவுகளைப் பேணுதல்.
- குருவையும், இறைவனையும் மதிக்கும் பாங்கு கிராமத்தில் இன்றும் இருந்ததைக் கூறுதல்.
- எல்லோரும் நன்றாய் வாழ வேண்டும் என்ற கிராமிய பொது உடைமைத் தத்துவம்.

பகுதி (ii)

(01)

01. இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்டு மண்ணறை மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த அதிசயக் காட்சியை நேரில் கண்ட மரியா மக்தலேனா அந்த இயேசுவைப் போற்றிப் புகழுவதாக அமைய பெற்றமை ~~பாடலாக~~ மையக் கருத்தாக கொண்டு எழுதப்பட்டுள்ளது.

02). யேசு இறந்து மரணித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.
- எமது உள்ளத்துள் புகுந்து எமக்கு துன்பமின்றி எமை தினம் காப்பார்
- நம்மிடமுள்ள அகந்தையை நாம் இல்லாமல் செய்கின்ற போது நமை காப்பார்.
- அவரது மூன்றாம் நாள் உயிர்ப்பு, அவர் ஆகும் கூறியது போல "முன்னர் தீமை வதைக்க கொன்றால் மூன்று நாட்களில் உயிர்த்தெழுவேன்"
- உயிர்த்தெழுந்தமைக்கு சாட்சியாக மரியா

சிலுவையால் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த யேசுவை முதலில் நேரில் கண்டவர்.

- நேசம் மிக்கவள்
- அன்பின் வடிவமாக வாழ்பவள்
- யேசு கிறிஸ்து மீது பாசமுடையவள்
- அன்பு பொழிந்த முத்தியினையுடையவர்
- பெண்மைக் குரிய குணம் படைத்தவர்.
- யேசுவின் வழிமுறையால் நல்லறம் பேணுபவள்.

தாள்.

மக்களின் பாவச்சுமையை நீக்க சிலுவையில் மாண்டவர்.
சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தவர்.
நமது கர்வத்தை விட்டொழித்து வாழ்வோமாயின் யேசு நமக்குள் புகுந்து அழிவில்லாமல் எம்மைக் காப்பார்.
உடலின் தீமை வடிவத்தினை அழித்து மூன்றாம் நாள் நல்லுயிராக தோற்றம் பெற்றவர்.
மனையின் பேயார்
மணமொழியால் தோற்றுவிக்க கூடியவர்
அன்பின் வடிவமாக வாழ்பவள்.
யேசுவை உணர்ந்தலே நுட்பமான வாழ்வின் பாதையாகும்.

உருவகம் - உண்மையென்ற சிலுவை.
எதுகை, மோனை அணிபாகும் -
வாக்கம் - -

(02)

அ. வண்டு வடிக்கப்படுவது தேனை உண்டு மகிழும். அது மலர்களின் தேனைக் குடித்து மதிமயங்கி கிடப்பதாக கவிஞர் கற்பனையை வெளிப்படுத்துகிறா
- தலைவி வண்டை நாவற் கனி என நினை
- வண்டு தலைவியை சந்திரன் என நினைத்தல்.
- வண்டு தலைவியின் கையை தாமரை மலர் என நினைத்தல்.

ஆ - வானூர் மதியம் - உருவகம்
மலர்க்கரம் - உவமை
சம்புவின் கனி - உவமை

(03)

அ) புத்தகங்களின் சிறப்பு.
- புத்தகங்கள் வாசிப்பவர்க்கு மனம் ஒன்றிய இனிய அனுபவங்களைத் தருதல்.
- மனிதர்களுக்கு மிகவும் உயர்ந்த அர்த்தமான கருத்துக்களை நெஞ்சிலே உதித்த அறிவொளியால் விதைக்கச் செய்தல்
- புத்துணர்வு தருதல்.

புத்தக சாலைகளது சிறப்பு
- மனிதர் யாவரும் அன்பு நெறி காண்பதற்கு சிறந்த பண்புகளைப் பெறுவதற்கு சுய நலப் போக்கினைத் தவிர்த்து பொது நோக்கில் சிந்திப்பதற்கும் ஏற்ற இனிய உயர்வான சிந்தனைகளைக் கொண்ட புத்தகங்களை கொண்டு வழங்குதல்.
- மக்கள் புனிதமுறவும் புகழினை பெறுவதற்கும் ஏற்ற புத்தகங்களை கொண்டிருத்தல்.

உ) புத்தக சாலைகள் ஆற்ற வேண்டிய பணிகள்.

- பிற மொழியில் உள்ள நூல்கள் அனைத்தையும் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்து தருதல்.
- தமிழ் மொழியில் உள்ள கதை நூல்களோடு உரை நடை நூல்களைக் கொண்டிருத்தல்
- பல்கலை சார்ந்த நூல்களைச் சேகரித்து வாசகர்களுக்கு ஏற்ற வகையில் துறை ரீதியாக பிரித்து அடுக்கி வைத்திருத்தல்.

04)

அ) கதைக் களங்களான

குடும்பம் தெருவும், ஊர், வீதி

க. ஹாஜியார் கடை

உ. தபால் கந்தோர்

ங. வீடு என்பன பற்றிய விபரிப்புக்கள் சுட்டிக் காட்டப்படின் முழுப் புள்ளிகள் வழங்குக.

உ) தபால்காரனின் பண்புகள்

- பொருத்தமான உதாரணங்கள் ஆதாரத்துடன் விளக்கப்படின் புள்ளியளிக?

05)

அ) மானுடக் காதல்

- சுனைப் பூக் குற்று - - -
- சிறுவாய் வளைப்பனவாகி
- உள்ளம் போய் நாண் போய் —

எனும் மூன்று பாடல்கள் வாயிலாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்

ஆ) இறைவன் மீது கொண்டுள்ள தெய்வீக / ஆன்மிக காதல்

- முத்தாம் கொட்ட - - -
- நெற்றிரா வந்தொருவன் - - -

எனும் இரு பாடல்களையும் கொண்டு விளக்கப் பட்டிருத்தல் வேண்டும்.